From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19/2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : ஈஸ்வரன் | Father/Husband Name | : நாகன் |
| | : | Calling | : |
| | : | Age | : |

Date : 23.04.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23 day of 04.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

அசா 1 முருகேசன் எனது மருமகன். நான் தொந்தலிங்கபுரத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன், பட்டியல் சாட்சி 4 பார்வதி எனது மனைவி. வாகன விபத்தில் இறந்துபோன அழகேசன் எனது மகன். 29.08.2020 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது எனது மருமகன் அசா1 எனக்கு போன் செய்தார். அசா1 எனது மருமகன் கொட்டாம்பட்டியில் உரைக்கடை வைத்து நடத்திவருகிறார். பணம் வசூல் செய்ய கொட்டாம்பட்டியிலிருந்து மேலுருக்கு என் மகனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றபோது பாண்டங்குடி விலக்கு அருகே பகல் 12.30 மணிக்கு சென்றபோது கொட்டாம்பட்டியிலிருந்து சிங்கம்புணரிக்கு சென்று கொண்டிருந்த டிப்பர் லாரி இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதை அசா1 கூறி தெரிந்து கொண்டேன், தகவல் அறிந்த நானும், எனது மனைவி சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சம்பவ இடத்திலேயே எனது மகன் இறந்துவிட்டார். அவரை மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். புகாரை அசா1 எனது மருமகன் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

விபத்து நடந்தது பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. எனது மருமகன் கூறிதான் தெரியும், எனது மகன் காலை வேலைக்கு எத்தனை மணிக்கு செல்வார் என்றால்

07.30 மணிக்கு. காலை உணவு சாப்பிட்டுதான் வேலைக்கு வருவாரா என்றால் உணவு சாப்பிட்டுதான் வருவார். விபத்து நடந்து அன்று சாப்பிட்டுவந்தாரா என்றால் நான் பார்க்கவில்லை. எனது மகன் காலை உணவு உண்ணாமல் அசதியால், கவனக்குறைவாகவும், அதிவேகவும் சென்று திரும்பிய டிப்பர் லாரியின் இடதுபக்கம், கதவு அருகே மோதி தனக்குதானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அது தெரிந்தும் இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19/2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : பார்வதி | Father/Husband Name | : ஈஸ்வரன் |
| | : | Calling | : |
| | : | Age | : |
| Date | : 23.04.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 23 day of 04.2025.

**( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

அசா 1 முருகேசன் எனது மருமகன். நான் தொந்தலிங்கபுரத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன், பட்டியல் சாட்சி 3 ஈஸ்வரன் எனது கணவர். வாகன விபத்தில் இறந்துபோன அழகேசன் எனது மகன். 29.08.2020ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது எனது மருமகன் அசா1 எனக்கு போன் செய்தார். அசா1 எனது மருமகன் கொட்டாம்பட்டியில் உரைக்கடை வைத்து நடத்திவருகிறார். பணம் வசூல் செய்ய கொட்டாம்பட்டியிலிருந்து மேலுருக்கு என் மகனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றபோது பாண்டங்குடி விலக்கு அருகே பகல் 12.30 மணிக்கு சென்றபோது கொட்டாம்பட்டியிலிருந்து சிங்கம்புணரிக்கு சென்று கொண்டிருந்த டிப்பர் லாரி இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியதை அசா1 கூறி தெரிந்து கொண்டேன், தகவல் அறிந்த நானும், எனது கணவரும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது சம்பவ இடத்திலேயே எனது மகன் இறந்துவிட்டார். அவரை மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். புகாரை அசா1 எனது மருமகன் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு எத்தனை மணிக்கு தகவல் வந்தது என்றால் 12.45 மணிக்கு தகவல்

வந்தது.  சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, மருமகன் கூறிதான் தெரியும். எனது மகன்தான் கவனக்குறைவாகவும், அதிவேகமாவும், திரும்பிய டிப்பர் லாரி மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார், நஷ்ட ஈட்டிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.  விபத்து நடத்தது யார் மீது தவறு என்று விசாரித்து தெரிந்துகொண்டிர்களா என்றால் கேட்டு தெரிந்துகொண்டேன், டிப்பா் லாரி ஓட்டி வந்தவர் மீது தான் தவறு. அதை என் மருமகன் சொல்லி தெரிந்துகொண்டேன். அசா**1** எனது மருமகன் என்பதாலும், இறந்து போனவர் எனது மகன் என்பதாலும், உண்மையை மறைத்து எதிரி  மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.